**ரத்தொட்டை பிரதேச சபையி - 2024**

**--------------------------------------------------**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ரத்தொட்ட பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான மற்றும் செலவினக் கணக்கு, மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (1) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10(1) உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரத்தொட்ட பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்பு

இந் நிதிக் கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமானதன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்.

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட கட்டளைகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்.

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்.

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 .நிதிக் கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த மொத்தம் ரூபா. 251,720 பெறுமதியான 09 புத்தக இராக்கைகள் மற்றும் CCTV கமரா தொகுதியொன்று கணக்கீடு செய்யப்படவில்லை. | 2025 ஆம் ஆண்டிற்கான இறுதிக் கணக்குகளைத் தயாரிக்கும் போது இது சரி செய்யப்படும் என்பதாக. | சரியாகத் கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். |

### 1.6.2 இணங்காத கட்டுப்பாட்டுக் கணக்குகள் மற்றும் அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட 09 விடயங்களுக்குரிய மீதிகள் அவற்றிற்குரிய பதிவேடுகள் மற்றும் அட்டவணைகளுடன் ஒப்பிடும் போது மீதிகளுக்கு இடையே மொத்தம் ரூபா 33,417,192 ஆன வேறுபாடு ஒன்று இருந்தது. | அம்மீதிகளை இனங்கண்டு கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக. | கணக்கு மீதிகள், பெறுமதிகள் உரிய பட்டோலை களுடன் ஒப்பிட வேண்டும். |

### 1.6.3 கணக்காய்விற்காக தேவையான எழுத்துமூல சான்றுகளின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வவாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட மொத்தம் ரூபா 117,627,552 ஆன 16 கணக்கு விடயங்கள் தொடர்பான கோவைகள், ஆவணங்கள் அட்டவணைகள் மற்றும் நாளதுவரை யாக்கப்பட்ட வருமான பதிவேடுகள் சமர்ப்பிக்கப்படாததால், அவற்றை கணக்காய்வின் போது திருப்திகரமாக மெய்மையாய்வு செய்ய முடியவில்லை. | தகவல்களை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக. | கணக்கு மீதிகள் உறுதிப்படுத்தப்படும் வகையில் உரிய சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

### 1.7 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், மற்றும் பிரமாணங்களுடனான இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன

.

| | சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணக்கமின்மை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | **1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டம்**<br>122 ஆம் பிரிவு | நகர மண்டப வாடகை, விளையாட்டு மைதான வாடகை, பாலர் பாடசாலைகளுக்கான கட்டணம், சபைக்குச் சொந்தமான வாகன வாடகை மற்றும் பம்பரகிரியெல்ல சுற்றுலா தளத்தைப் பார்வையிடுவதற்கான டிக்கெட்டுகளை விற்பனை செய்தல் தொடர்பான கட்டணங்களை அறவிடுவது தொடர்பாக உப விதிகள் இயற்றப்பட்டு அல்லது தழுவப்பட்டிருக்கவில்லை. | உப விதிகள் வரைவாக்கப்பட்டு அங்கீகாரத்திற்கு அனுப்ப எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படுவதாக. | வருமானம் ஈட்டும் துறைகள் தொடர்பான உப விதிகள் இயற்றப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| **(ஆ) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம்** | | | |
| நி.பி 571(3) | காலாவதியான ரூபா 1,024,316 ஆன 17 வைப்பு மீதிகள் தீர்வு செய்யப் பட்டிருக்கவில்லை. வேண்டும். | 2025 ஆம் ஆண்டின் போது தீர்வ செய்வதற்கு முடியுமான வைப்பு மீதிகளை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக | காலாவதியான வைப்புக்கள் தீர்வு செய்யப்பட வேண்டும். |
| **(இ) 2018 திசெம்பர் 06 ஆந் திகதிய 2016/3/2 ஆம் இலக்க மத்திய மாகாண உள்ளுராட்சி மன்ற ஆணையாளரின் சுற்றறிக்கை** | | | |
| 5 ஆம் பிரிவு | குறைந்தது 5 ஆண்டுகளுக்கு ஒரு முறையாவது மதிப்பிடப்பட்ட வாடகை திருத்தப்பட வேண்டும் என்ற போதிலும், ஜனக பண்டார தென்னகோன் மாவத்தையில் அமைந்துள்ள 07 கடைகள் 2016 நவம்பர் 01 ஆந் திகதி மதிப்பீடு செய்யப்பட்டு 08 ஆண்டு கள் கடந்து விட்ட போதும் புதிய மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2024 ஆம் ஆண்டில் சட்டம் அமல்படுத்தப்பட்டே பாது இந்தப் பணத்தை செலுத்த அவர்கள் ஒப்புக்கொண்டிருந் ததுடன், தற்போது இந்தப் பணத்தை செலுத்தும் பணியில் ஈடுபட்டுள்ளதாக. | 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை வாடகை மதிப்பீட்டு அறிக்கைகள் பெறப்பட்டு ஒப்பந்தங்கள் திருத்தப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய மீண்டுவரும் வருமானம் ரூபா 20,753,873 ஆக இருந்ததுடன், அதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய மீண்டெழும் வருமானம் ரூபா 5,323,490 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | வருமான மூலம் | 2024 மதிப்பிடப்பட்ட வருமானம் | 2024 பட்டியலிடப்பட்ட வருமானம் | 2024 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | 2023 மதிப்பிடப்பட்ட வருமானம் | 2023 பட்டியலிடப்பட்ட வருமானம் | 2023 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 1,955,000 | 1,892,807 | 2,592,974 | 2,301,740 | 1,990,000 | 1,802,388 | 1,680,072 | 3,001,907 |
| (ii) | வாடகை | 6,494,050 | 5,986,490 | 6,738,422 | 3,218,595 | 5,674,050 | 5,239,437 | 4,537,670 | 3,970,527 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 1,150,000 | 871,500 | 871,500 | 406,386 | 1,152,250 | 917,300 | 917,300 | 406,386 |
| (iv) | ஏனைய வருமானம் | 46,137,000 | 41,863,990 | 25,403,731 | 43,238,934 | 45,141,500 | 29,442,279 | 25,740,391 | 26,778,675 |
| | | 55,736,050 | 50,614,787 | 35,606,627 | 49,165,655 | 53,957,800 | 37,401,404 | 32,875,433 | 34,157,495 |

### 2.2.2 வருமானம் சேகரிப்பின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரிப்பின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) வீதவரியும் வரியும்** | | |
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஈந் திகதியில் உள்ளவாறு நிலுவை வீதவரி மீதி ரூபா 1,828,929 ஆக இருந்தது. அதில் ஒரு அலகிலிருந்து ரூபா 1,000 ஐ மிகைத்த 261 வீதவரி அலகுகளில் ரூபா 358,317 தொகையும் ஒரு அலகிலிருந்து ரூபா 5,000 ஐ மிகைத்த 77 வீதவரி அலகுகளுக்குரியதாக ரூபா 735,688 தொகை என்பவற்றை 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 158 ஆம் பிரிவின் பிரகாரம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 158 ஆம் பிரிவின் பிரகாரம் நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | நிலுவை வருமானங்கள் விரைவில் அறவிடப்பட வேண்டும். |
| **(ஆ) வாடகை** | | |
| மீளாய்வாண்டின் கஇறுதி திகதியில் உள்ளவாறு ஒரு கடைக்கு ரூபா 5,000 முதல் ரூபா 100,000 வரை வாடகை செலுத்தாத 48 குத்தகைதாரர் களிடமிருந்து மொத்தம் ரூபா. 1,245,965 ஆன கடை வாடகை அறவிடப்பட்டிருக்க வில்லை. | எதிர்காலத்தில் நிலுவையில் உள்ள கடைகளை சீல் வைக்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாக். | நிலுவை வருமானங்கள் விரைவில் அறவிடப்பட வேண்டும். |

**(இ) அனுமதிப்பத்திரக் கட்டணங்கள்**

| | | |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு நிலுவையில், 5 ஆண்டுகளுக்கும் மேலாக நிலுவையில் இருந்த ரூபா 406,385 வியாபார அனுமதிப்பத்திர நிலுவைக் கட்டண மீதியொன்று அறவிடப்பட்டிருக்கவில்லை. | பழைய மீதிகள் விசாரணைக்குப் பிறகு தொடர்புடைய அங்கீகாரத்துடன் நிலுவைத் தொகையை பதிவழிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதாக. | நிலுவை வருமானங்கள் விரைவில் அறவிடப்பட வேண்டும். |

**(ஈ) ஏனைய வருமானம்**

| | | |
|---|---|---|
| மாகாண பிரதான செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய் முத்திரைக் கட்டணங்கள் ரூபா 29,900,550 ஆக இருந்தது. | கடிதங்கள் மற்றும் ஆவணங்களை பெற்றுக்கொண்டு அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பபதாக. | நிலுவை வருமானங்கள் விரைவில் அறவிடப்பட வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டிய 05 கணக்கு மீதிகளின் மொத்தம் ரூபா 29,375,335 ஆக இருந்தது. அதில் 01 இற்கு மேற்பட்ட 05 வருடங்களுக்கு குறைந்த மீதி ரூபா 6,577,969 மற்றும் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட கணக்கு மீதி ரூபா 6,118,484 ஆக இருந்தது. | பெற வேண்டிய மீதிகளை அறவிடுவதற்காக தேவையான நடவடிக்கை எடுப்பதாக. | பெறவேண்டிய மீதிகள் அறவிடப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய 03 கணக்கு மீதிகளின் மொத்தம் ரூபா 22,251,229 ஆக இருந்தது. அதில் 01 இற்கு மேற்பட்ட 05 வருடங்களுக்கு குறைந்த மீதி ரூபா 527,524 மற்றும் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட கணக்கு மீதி ரூபா .4,457,528 ஆக இருந்தது. | செலுத்த வேண்டிய மீதிகளை செலுத்துவதற்காக தேவையான நடவடிக்கை எடுப்பதாக. | செலுத்த வேண்டிய மீதிகள் செலுத்தப்பட வேண்டும். |

**3.2 மனித வள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் உள்ளவாறான பதவியணியுடன் ஒப்பிடும் போது 11 பதவிகளில் 15 வெற்றிடங்கள் காணப்பட்டன. | வெற்றிடமாக உள்ள பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்வதன் அவசியத்தை தெளிவுபடுத்தி, ஆட்சேர்ப்புக்கு அங்கீகாரம் பெறுவதற்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளன. | வெற்றிடங்களை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) இடமாற்றம் பெற்றுச் சென்ற ஓய்வுபெற்ற, சேவையை விட்டுச் சென்ற, மரணித்த மற்றும் தற்காலிக சேவை நிறுத்தப்பட்டுள்ள 12 உத்தியோகத்தர்களிடமிருந்து மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்தம் ரூபா 1,243,176 ஆன கடன் மீதியொன்று அறவிடப்பட்டிருக்கவில்லை. | அறவிடப்பட வேண்டிய பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | பெறவேண்டிய மீதிகள் அறவிடப்பட் வேண்டும். |